Previous Date of examination :03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25 /2020

2023-ம் ஆண்டு ஜுலை மாதம் 28 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.68-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கார்த்திகா | வயது | 26 /2023 |
| தகப்பனார் பெயர் | பாலகிருஷ்ணன் | ஜாதி | |
| தொழில் | வீட்டு குடித்தனம் | மதம் | |
| ஊர் | மன்னார்குடி, | தாலுக்கா | |

( 1வது எதிரி ஆஜர், 2 வது எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் மனுதாக்கல்செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :

நான் தற்போது மன்னார்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னர் நான் இஸ்லாம் மதத்திற்கு மாறி எனது பெயரை பரிதாபேகம் என மாற்றிக்கொண்டு, ஷாகுல்ஹமீது என்பவரை திருமணம் செய்து கொண்டேன். நான் சம்பவ காலத்தில் மன்னார்குடி அண்டோரா தெருவில் வசித்து வந்தேன். நான் பி.பி.ஏ., முடித்திருந்தேன். எனது தகப்பனாருக்கு தெரிந்த ரமேஷ் என்பவர், ருக்மணி பாளையத்தில் ஸ்டூடியோ வைத்திருந்தார். அவர் எனது அப்பாவிடம் கோர்ட்டில் வேலை இருப்பதாக சொல்லியுள்ளார். அதற்கு ரூ.2 இலட்சம் செலவாகும் என்றும், முன்பணமாக ரூ.1 இலட்சம் கட்ட வேண்டும் என்றும், சொன்னார். வேலை உடனே கிடைத்த விடும், வேலை கிடைத்தவுடன் மீதத்தொகையை கட்டலாம் என சொன்னார். அதன்பிறகு எனது போட்டோ, சர்டிபிகேட், சுய விவரங்கள் அடங்கிய படிவம் ஆகியவற்றையும், பணத்தையும் தயார் செய்து கொண்டு நேரடியாக கொண்டு போய் கொடுக்கலாம் என சொன்னார்கள். அதன்பிறகு திருவாரூர் துர்காலாயா ரோட்டில் இயற்கை பொருட்களை விற்கும், சக்திவேல் என்பவரிடம் கொடுக்க சொல்லி, நான், எனது அப்பா, ரமேஷ் ஆகியோர், 2018 ம் வருடம் 3 ம் மாதத்தில் வந்து கொடுத்தோம். தேதி ஞாபகமில்லை.

**2.** சக்திவேலுவின் வீட்டில் வைத்த நான் எனது அப்பா மற்றும் ரமேஷ் ஆகியோர் ரூ.1 இலட்சம பணத்தை கொடுத்தோம். அவரை பார்த்தால் ஓரளவு எனக்கு அடையாளம் சொல்ல

முடியும் . ஆஜர் எதிரி தான் நான் சொல்லும் சக்திவேல் ஆவார். ( **சாட்சி நீதிமன்றத்தில் உள்ள நபர்களை பார்த்துவிட்டு எதிரி கூண்டிலிருக்கும் எதிரி சக்திவேலுவை அடையாளம் காட்டுகிறார்**) அதன்பிறகு 4 வது மாதம் வேலை கிடைத்து விடும் என்று சொன்னார். 4 வது மாதம் முடிந்தும் வேலை கிடைக்காததால், நாங்கள் ரமேஷை தொடர்புகொண்டு வேலை என்ன ஆனது என கேட்டோம். ரமேஷ் சக்திவேலுவை தொடர்பு கொண்டு கேட்டுவிட்டு, மே மாதம் கோர்ட் லீவு என்றும், ஜூன், ஜூலையில் போட்டு விடுவார்கள் என்றும், சொன்னார். அதன்பிறகு மாதங்கள் போய் கொண்டிருந்தது. வேலை கிடைக்கவில்லை. அதனால் புகார் கொடுக்கலாம் என்று இருந்த நிலையில், எங்களுக்கு முன்னர் சுரேஷ் என்பவர் புகார் கொடுத்து விட்டதாகவும், அதனால் எங்களை சாட்சிகளாக வந்து சொல்லுமாறு சொன்னார்கள். போலீசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

**1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

என்னை போலீசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சக்திவேல் வீட்டிற்கு நேரிடையாக போகவில்லை என்றால் சரியல்ல. போனேன். எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை செய்யவில்லை என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரி சக்திவேல் நீதிமன்றத்தில் வேலை செய்யாத நிலையில், எப்படி எனக்கு நீதிமன்ற வேலை கிடைக்கும் என நம்பினேன் என்றால் அவர் கோவிலில் அறங்காவலராக இருப்பதாகவும், அவருக்கு தெரிந்த நபர் மூலம் வேலை வாங்கி தருவதாகவும் சொன்னதாக ரமேஷ் என்பவர் சொன்னார். நான் ரமேஷின் பேச்சை கேட்டு ரமேஷிடம் தான் பணம் கொடுத்துள்ளேன் என்றும், 1வது எதிரியிடம் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போன்று 1வது எதிரியிடம் பணம் கொடுத்திருந்தார், அவரிடமிருந்து ஆவணம் எழுதி வாங்கியிருப்பேன் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், எனது அப்பா கொடுத்த தகவலின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை போல் பல நபர்களிடம் பணம் பெற்று 2 வது எதிரியிடம் கொடுத்து விட்டு 1வது எதிரி ஏமாந்துள்ளார் என்றால், பல நபர்களிடம் 1வது எதிரி பணம் வாங்கியது தெரியும். எனது அண்ணன் ஐயப்பன் என்பவருக்காகவும், ரூ.1 இலட்சத்தை கொடுத்த விபரம் எனக்கு தெரியும். 1வது எதிரி வேறு யாரிடமும் பணம் கொடுத்து ஏமாந்தாரா? என்ற விபரம் எனக்கு தெரியாது. 2வது எதிரி நீதிமன்றத்தில் வேலையில் இருப்பதால், 1வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- எல்.ரகுபதிராஜா,
நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.